Tamilisch

# Psychomotorik in der Schule
## பாடசாலையில் உளவியலியக்கம்

உளவியலியக்க – பயிற்சியானது, அரசினர் பாடசாலையின் ஒரு சேவை வாய்ப்பாகும். இதனது சேவையைப் பிள்ளைகளும் பெற்றோரும் ஏனைய இவர்கள் தொடர்பான மனிதரும் செலவில்லாமல் பெற்றுக்கொள்ள முடியும்.

வளர்ச்சியில் தாமதத்தைக் காட்டுகின்ற, கவனத்தையீர்க்கின்ற அசைவு நடத்தைகளைக் கொண்ட பிள்ளைகள்: அவர்களால் அமைதியாக இருக்க முடியாது, நடக்கின்றபோது கவனமின்மையுடன் தமது காலிலேயே இடறி விழுதல்; அல்லது இவர்கள் சரியான பயந்தவர்களாக இருப்பது மட்டுமல்லாமல் அசையும் வாய்ப்புக்களைத் தட்டிக்கழிப்பவர்களாகவும் இருப்பர். இவ்வாறான நடத்தைக்கான காரணங்கள் வெவ்வேறானவை, பன்முகப்பட்டவை.

ஒரு பிள்ளையினுடைய அசையும் நடத்தையில் பிரச்சினைகள் தென்படுமாயின் அது, அதனுடைய கற்றல் நடவடிக்கைகளிலும் சமூகத்தொடர்பாடலிலும் வெளிப்படும்: ஒரு பிள்ளையிடம் அமைதியற்ற அசைவுநடத்தை இருக்குமாயின், பிள்ளையினால் நன்கு கிரகிக்க முடியாதிருக்கும்; ஒரு பயந்த சுபாவமுள்ள, சாதுரியமற்ற பிள்ளையிடம் அநேகமாகக் குறைந்தளவு தன்னம்பிக்கை இருப்பதுடன், கற்றலில் தேவையான முன்னேற்றத்தை வெளிப்படுத்தவும் தயங்கும். இப்படியான பிள்ளைகள் நலமாக மேலும் விருத்தியடைவதற்கு, ஆதரவு தேவைப்படுகின்றது.

புலன்களால் உணர்தல், சிந்தித்தல், அசைதல், மனஉணர்வு என்பவற்றிற்கிடையில் ஒரு தொடர்பு இருக்கின்றது. இந்த அறிவின் அடிப்படையில், உளவியலியக்க – பயிற்சியினூடாகப் பிள்ளைகளின் விருத்தியை ஊக்குவிக்கலாம். இப்பயிற்சிகளின்போது, அவர்களது பலத்தில் அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுவதுடன், தம்மிடமுள்ள திறமைகளை அதில் ஈடுபடுத்துவர். வெற்றியளிக்கக்கூடிய சிகிச்சைக்கான மேலதிகக் காரணி, பெற்றோரினதும் ஆசிரியரதும் ஆலோசனை, ஆதரவு வடிவிலான இணைந்த வேலையாகும்.

உளவியலியக்க – பயிற்சியாளர்கள் ஒரு பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட துறைசார்உயர்கல்லூரிகளில் முழுநேரப்பட்டப்படிப்பைக் கற்று முடித்தவர்களாவர். இவர்களது பட்டப்படிப்பு நாடளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டது.

சித்திரை 2010